மத்திய ஆசிய கடற்கரை கைப்பந்து போட்டியில் பங்கேற்கும் வீரர்களுக்கு ஊக்கத்தொகை!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, செப்.2

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் சார்பில் மத்திய ஆசிய கடற்கரை கைப்பந்து போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்கள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டி ஆகியவற்றிற்கு ஊக்கத்தொகையினை நேற்று வழங்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்களாதேஷ் நாட்டில் 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் 8-ஆம் தேதி முதல் செப்டம்பர் 16-ஆம் தேதி வரை நடைபெற உள்ள மத்திய ஆசிய கடற்கரை கைப்பந்து போட்டியில் கலந்துகொள்ளும் தமிழ்நாட்டு கைப்பந்து வீரர்கள் ர.ராபின். எஸ்.பரத், வீராங்கனைகள் செல்வி டி.ஜனனி, செல்வி எஸ்.பவித்ரா மற்றும் பயிற்றுநர் எம்.சஞ்சய் ஆகியோருக்கு விமானக் கட்டணம், விசா செலவுகள் மற்றும் பிற செலவினங்களுக்காக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் சார்பில் ரூ.4,58,720/க்கான காசோலையினை நேற்று (01.09.2023) நேரு உள்விளையாட்டரங்கில் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர் பேரவை சார்பில் 2023ஆம் ஆண்டு செப்டம்பர் 6 ஆம் தேதி முதல் செம்டம்பர் 9ஆம் தேதி வரை நடைபெற உள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிக்காக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் சார்பில் ரூ.8,00,000/க்கான காசோலையினை மருத்துவக் கல்லூரி மாணவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, கைப்பந்து சங்க நிர்வாகிகள், கைப்பந்து வீரர் மற்றும் வீராங்கனைகள், மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

பள்ளிப்பட்டு மத்திய ஒன்றிய திமுக சார்பில் திண்ணை பிரச்சாரக் கூட்டம்!

திருவள்ளூர், செப்.2-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு மத்திய ஒன்றிய திமுக சார்பில் குமாராஜ்பேட்டை,மேளப்பூடி, ஊராட்சிகளில் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திராவிட மாடல் அரசின் சாதனைகள் விளக்கியும் நாடாளுமன்றதேர்தலுக்கானதிண்ணாப் பிரச்சார கூட்டம் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் ஆலோசனைப்படி பள்ளிப்பட்டு மத்திய ஒன்றிய பொறுப்பாளர் பி.டி.சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் தூத்துக்குடி சரத் பாலா பங்கேற்று பேசுகையில் திராவிடம் மாடல் ஆட்சியில் குடும்பத் தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய் என பல்வேறு திட்டங்களை பெண்களுக்கான வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்து வருவதை பட்டியலிட்டு பேசினார்.

நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான இந்திய கூட்டணி வெற்றி பெற செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் பள்ளிப்பட்டுவடக்கு ஒன்றிய செயலாளர் சி. ஜெ. சீனிவாசன், முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் ரவீந்திரநாத், திருமலை லோகநாதன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முரளி சேனா, திமுக நிர்வாகிகள் எத்திராஜ், சுப்பிரமணி, ராமசாமி, ராமச்சந்திரன் சுரேஷ், அழகிரி,ஏழுமலை, லிங்கன் ,கோவரதன், கதிரவன்,மோகன், மணி, குமரேசன், அரோன், மற்றும் கிளை கழக செயலாளர் கழக முன்னோடிகள் கழக தாய்மார்கள் என பலர் கலந்து கொண்டனர்.

வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !